## DEPOSITIION OF WITNESS

## (CHAPTER OF XXV, CRIMINAL PROCEDURE CODE )
## IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE, TIRUPPUR

**Case No. S.C. 49/2024**

| | | |
|---|---|---|
| Deposition of Witness for | : | PW-9 / Lw- 12 |
| Name | : | Mr. S. விநாயகம் |
| Father Name | : | சிங்காரவேலு |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 31.07.2025

எதிரி மற்றும் வழக்கறிஞர் ஆஜர்

அழைப்பாணையின் பேரில் சாட்சி வரவழைக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை

1. நான் தற்சமயம் நல்லூர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிகிறேன். கடந்த 28.11.2023 ஆம் தேதி வீரபாண்டி காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணியில் இருந்த போது நல்லூர் காவல் நிலைய ஆய்வாளர் விடுப்பில் இருந்ததால் பொறுப்பு அதிகாரியாக பணியாற்றினேன். நல்லூர் காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் முரளிதரன் பதிவு செய்த நல்லூர் காவல் நிலைய குற்ற எண்.937/2023 சட்டப்பிரிவுகள் 394, 397 இ.த.ச

வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன். 29.11.2023 ஆம் தேதி வழக்கு விசாரணையை தொடங்கினேன். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் புகாதாரமிடமிருந்து போலீசார் பதிவு செய்த வாக்குமூலம் என்றால் சரி. அந்த வாக்குமூலம் ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது அந்த வாக்குமூலத்தின் அடிப்படையில் நல்லூர் காவல் நிலையத்தால் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ–**9**. 29.11.2023 ஆம் தேதி காலை 9.00 மணிக்கு சம்பவ இடமான முத்தனம்பாளையம், கோவில்வழிச் சாலையில் சரணம் ஐயப்பா நகர், சமீரா ஃபேஷன்ஸ் கடை அருகே ஆஜராகி சாட்சிகள் விஜய், யுவப்பிரகாஷ் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர், வரைபடம் தயார் செய்தேன். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் தான் பார்வை மகஜர். அந்த வரைபடம் **அ.சா.ஆ–10.**

2. சம்பவ இடத்தில் கிடந்த வழக்கு சம்பவத்திற்கு பயன்படுத்திய இரும்பு ராடை சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மூலம் கைப்பற்றினேன். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் என்னால் தயார் செய்யப்பட்ட கைப்பற்றுதல் மகஜர். அது **அ.சா.ஆ–11**. தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் இரும்பு ராடு தான் என்னால் கைப்பற்றப்பட்டது. அன்றைய தினமே சாட்சிகள் விஜய், யுவபிரகாஷ், முகில் ஆகியோரின் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அதன் பிறகு கோவை அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த கோமதிராணி மற்றும் தினேஷ்குமார் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அதன் பிறகு நல்லூர் காவல் நிலைய ஆய்வாளர் பொறுப்பு எடுத்துக் கொண்டதால் வழக்கு விசாரணைக் கோப்பை மேல் விசாரணைக்காக அவரிடம் ஒப்படைத்தேன்.

3. கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றப்பட்ட இரும்பு ராடை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் படிவம் 91 நான் தயார் செய்தது. அது அ.சா.ஆ–**12.**

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

1. எந்த தேதி வரை நல்லூர் காவல் நிலைய பொறுப்பதிகாரியாக இருந்தேன் என்றால் 29.11.2023 அன்று ஒரு நாள் மட்டும் பொறுப்பு அதிகாரியாக இருந்தேன். **அ.சா.ஆ–12.** 2.12.2023 ம் தேதி தான் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரி. ஆனால் நான் அன்றே காவல் நிலையத்தில் ஒப்படைத்து விட்டேன். **அ.சா.ஆ–12.** தயார் செய்த தினத்திலே நீதிமன்றத்திற்கு அனுப்ப நடவடிக்கை எடுப்பீர்களா என்றால் நான் ஒரு நாள் பொறுப்பதிகாரியாக தான் பணியாற்றினேன். அதை நான் சம்பந்தப்பட்ட அதிகாரியிடம் ஒப்படைத்து இருந்தேன். 2.12.2023 ம் தேதி படிவம் 91 நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட போது அதனுடன் வழக்குச் சொத்து இல்லை என்று தான் நீதிமன்றத்தால் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்குத் தெரியாது. பார்வை மகஜர், வரைபடம் எந்த தேதியில் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டது என்றால் நான் தயார் செய்த அன்று கோப்பில் இணைத்து விட்டேன். அன்றைய தினமே நீதிமன்றத்திற்கு பார்வை மகஜர், வரைபடம் அனுப்பியதற்கு முயற்சி மேற்கொள்ளவில்லை என்றால் சரி. கோப்பில் இணைக்கப்பட்டது. சொன்னா தேதியில் சொன்ன நேரத்தில் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை. சாட்சிகள் முன்னிலையில் பார்வை மகஜர், வரைபடம் தயார் செய்யவில்லை என்றால் தவறு.

2. சம்பவ இடத்தில் நான் சொன்னது போல் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் எந்த ஒரு இரும்புராடும் என்னால் சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றப்படவில்லை என்றால் தவறு. வழக்கின் சொத்துக்கள் மற்றும் ஆவணங்கள் 2.12.2023 ஆம் தேதி வழக்கிற்காக பிறகு தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் தவறு. 23.11.2023 ம் தேதி கோவை மருத்துவமனையில் கோமதிராணி மற்றும் தினேஷ்குமாரின் விபத்து பதிவேட்டு நகல் ஏதேனும் பரிசீலனை செய்தீர்களா என்றால் பார்த்தேன். விபத்து பதிவேட்டில் சிகிச்சையின் போது கோமதிராணியும், தினேஷ்குமாரும்

சம்பவ சமயத்தில் அடையாளம் தெரியாத நபர்களால் தாக்கப்பட்டதாக தெரிவித்துள்ளார்கள் என்றால் சரி. புகார் வாக்குமூலத்தை எந்த தேதியில் பார்த்தேன் என்றால் 23.11.2023 ம் தேதி பார்த்தேன்.

3. புகார் வாக்குமூலம் உதவி ஆய்வாளர் என்னிடம் ஒப்படைத்த போது தான் பார்த்தேன் என்றால் ஆமாம். முகில் என்னுடைய விசாரணையில் அவருடைய வீடு முத்தன்னம்பாளையம், கோவில்வழி சாலையில் உள்ளதாக சொன்னாரா என்றால் சரணம் ஐயப்பா நகரில் வசித்து வருவதாக சொன்னார். சரணம் ஐயப்பா நகர் மெயின் ரோட்டில் இருந்து எவ்வளவு தூரத்தில் உள்ளது என்றால் சுமார் 50 அடி இருக்கும். வரைபடத்தில் சரணம் ஐயப்பா நகர் காட்டப்பட்டுள்ளதா என்றால் இல்லை. வழக்கு விசாரணைக்கு தேவை இல்லை என்பதால் காண்பிக்க வில்லை. சாட்சி முகிலின் வீடு வரைபடத்தில் குறிக்கப்பட்ட வில்லை என்றால் சரி. தேவையில்லை என்பதால் குறிப்பிடவில்லை

4. சரணம் ஐயப்பா நகரில் பல வீதிகள் உள்ளது என்றால் சரி. வரைபடத்தில் சரணம் ஐயப்பா நகர், முத்தன்னம்பாளையம், கோவில் வழி சாலையில் இருந்து எந்த இடத்தில் உள்ளது என்பது குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரி. சாட்சிகளில் வீட்டில் இருந்து பார்த்தால் சம்பவ இடம் தெரியும். சாட்சிகள் என்னுடைய விசாரணையில் அவர்கள் வீட்டில் இருந்து பார்த்தால் சம்பவ இடம் தெரியும் என்று சொல்லி உள்ளார்களா என்றால் ஆமாம். சம்பவம் இரவு 10.30 மணிக்கு நடந்துள்ளது என்றால் சுமார் 10.15 மணிக்கு நடந்துள்ளது. சம்பவம் நடந்ததாக சொல்லும் இடத்தில் சம்பவம் நடந்த போது மின் விளக்கு வெளிச்சங்கள் இல்லை என்றால் சரி.

5. இருட்டான நேரத்தில் தூரத்திலிருந்து சம்பவ இடத்தை பார்த்தால் எதுவும் தெரியாது என்றால் தவறு. நிலா வெளிச்சத்தில் ஆட்கள் அடையாளம் காணமுடியும். சாட்சிகள் என்னுடைய விசாரணையில் இதைப் பற்றி சொல்லி உள்ளார்களா என்றால் ஆமாம். மூன்று நபர்கள் சண்டை போட்டுக்

கொண்டிருந்ததாக சொல்லி உள்ளார்கள். வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சமீரா பேஷன் கடை, தாய் மெஸ், கவுண்டர் காம்பவுண்ட், செல்வம் கடை அவர்களை யாரும் சாட்சிகளாக விசாரணை செய்யவில்லை என்றால் சரி. சம்பவ இடத்திலிருந்து அந்த கடைகள் 150 அடி தள்ளி உள்ளது. சம்பவத்தைப் பற்றி தெரியாது என்பதால் அவர்களை சாரணை செய்யவில்லை. நான் விசாரணை செய்த சாட்சிகள் சம்பவ இடத்திலிருந்து எவ்வளவு தூரத்தில் வசித்து வருகிறார்கள் என்றால் குறிப்பிட்டு தூரம் சொல்லவில்லை. வீட்டிற்கு வெளியே வந்து இருந்து பார்த்தபோது சம்பவம் தெரிந்தது என்று சொல்லி உள்ளார். வரைபடத்தில் சாட்சிகள் உடைய வீடுகள் சம்பவ இடத்தில் இருந்து எந்த பகுதியில் உள்ளது என்று சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை. சாட்சிகள் அ.சா.ஆ–1,2 ற்கு தெரிந்தவர்கள் வழக்குக்காக தயார் செய்து உள்ளீர்கள் என்றால் தவறு. இரும்பு ராடு வழக்கு சொத்து விழக்கிற்கு பிறகு தாயார் செய்துள்ளீர்கள் என்றால் தவறு. இரும்பு ராடை அ.சா.1,2 யிடம் காண்பித்து விசாரித்திற்களா என்றால் இல்லை. அ.சா.1,2 ஐ நான் விசாரணை செய்தது மருத்துவமனையில். சொன்ன நேரத்தில் சொன்ன இடத்திற்கு விசாரணைக்கு செல்லவில்லை. முதல் விசாரணையில் சொல்லி உள்ளவாறு எந்த ஆவணங்களும் தயார் செய்யவில்லை. வழக்கிற்காக பிறகு தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் தவறு.

மறு விசாரணை: இல்லை

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN Digitally signed by K R KANNAN Date: 2025.07.31 19:36:25 +0530

கூடுதல் உதவி அமர்வு நீதிபதி,
திருப்பூர்.